விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்–05.27 p.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 06.00 p.m.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : C.C.350/2023**

**Prosecution witness : ம.சா.1** **Date : 14.08.2024**

| | |
|---|---|
| **Name : மகேந்திரன்** | **Taluk : மேட்டூர்** |
| **Father Name : ராமசாமி** | **Calling : விவசாயம்** |
| **Village : கொளத்தூர்** | **Age : 55** |

**(Complainant and Accused present.)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

நான் ஏற்கனவே எனது குறுக்கு விசாரணையில் 5 ஏக்கர் நிலம் தான் உள்ளது என்று சொல்லியுள்ள நிலையில் தற்போது 25 ஏக்கர் நிலம் உள்ளது பொய் என்றால் சரியல்ல. என் அப்பா பெயரில் உள்ளதை நான் தான் ஓட்டிவருகிறேன். என் அப்பா எனக்கு பிரித்து கொடுத்துவிட்டார். பெயர் மட்டும் என் அப்பா பெயரில் உள்ளது. என் விவசாயத்திலிருந்து வரும் வருமானம் மற்றும் நிலம் சம்மந்தமாக சொல்லும் தகவல்கள் பொய் என்பதால் தான் நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எனக்கு உடன் பிறந்தவர் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். எத்தனை பேர் என்றால் அண்ணன் ஒருவர் உள்ளார். நான் தாக்கல் செய்த வருமான வரி கணக்கில் லாபம் நஷ்டம் குறித்த கணக்குகள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. கணக்கு காட்டியுள்ளேன். 2022–2023 மற்றும் 2021–2022 ஆண்டு கணக்கு காண்பித்துள்ளேன். நான் எத்தனை வருடமாக வருமான வரி தாக்கல்

செய்து வருகிறேன் என்றால் 8 வருடங்களாக தாக்கல் செய்து வருகிறேன். நான் என் வருமானத்தை இந்த வழக்கில் நிரூபிப்பதற்காக நான் தாக்கல் செய்த வருடத்திற்கு முந்தைய வருட வருமான வரி கணக்கை தாக்கல் செய்ய தயாராக உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்கிறேன். நான் 8 வருடமாக வருமான வரி தாக்கல் செய்கிறேன் என்றால் அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும், நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வருமான வரிக்கணக்கில் ஒப்பந்த தொழில் சம்மந்தமான கணக்குகளோ அல்லது ரியல் எஸ்டேட் தொழில் சம்மந்தமான கணக்குகளோ குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் காட்டவில்லை. இந்த வழக்கில் ஒப்பந்த தொழில் செய்வதாகவோ, ரியல் எஸ்டேட் தொழில் செய்வதாகவோ சொல்வது பொய் என்றும், இந்த வழக்கிற்காக நான் மேற்கண்ட தொழில் செய்வதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாங்கி வேறு ஒருவருக்கு கைமாற்றிவிடுவதால் புரோக்கர் தொழில் தான். அதனால் காண்பிக்கவில்லை. மேற்கண்ட சங்கதிகளை எனது புகாரிலோ அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் புகாரில் சொல்லவில்லை. வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணங்களில் முதல் பக்கத்தில் மட்டும் தான் E-filing செய்த QR Code வேறு எந்த பக்கத்திலும் இல்லை என்றால் அதை பற்றி எனக்கு அவ்வளவாக தெரியாது. என்னுடைய ஆடிட்டரிடம் தான் கேட்க வேண்டும். வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணத்தை நிரூபிக்கும் பொருட்டு ஆடிட்டரை சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்பலாம் என்றால் அனுப்பலாம். வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணத்தில் இரண்டாவது மற்றும் மூன்றாவது பக்கம் அனைத்தும் இந்த வழக்கிற்காக தற்போது நான் தயார் செய்தது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக

என்னுடைய ஆடிட்டரிடம் கேட்டேன். அவர் தான் எடுத்துக்கொடுத்தார். வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணங்கள் உண்மை என்றால் முதலிலேயே தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. ஆடிட்டரிடம் கேட்டு தான் வாங்கினேன். வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணத்தில் நான் என்ன தொழில் செய்கிறேன் என்ற விவரமும், நான் செய்யும் வரவு செலவு கணக்குகள் விவரமும், என்ன வருமானம் வருகிறது என்ற விவரமும், எவ்வளவு செலவு என்கின்ற விவரம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நான் விவசாயம் செய்வதால் அது தேவையில்லை என்று எனது ஆடிட்டர் சொல்லிவிட்டார். 2021–2022–ம் தேதி வருமான வரி கணக்கில் இருப்பு தொகை ரூ.15,97,020/– மட்டும் தான் உள்ளது என்றால் உள்ளது. ஆனால் அதன் முழுவிவரம் என்னுடைய ஆடிட்டருக்கு தான் தெரியும். 2021–2022–ம் தேதி வருமான வரி கணக்கில் நான் கடன் கொடுத்தவர்களிடமிருந்து திரும்ப வட்டி பெற்ற தொகை மட்டும் ரூ.2,40,000/– காட்டியுள்ளேன் என்றால் சரிதான். அதே கணக்கில் விவசாயத்தில் வருமானம் ரூ.1,75,000/– காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். அதே ஆண்டில் தான் நான் விவசாய கடன் ரூ.5,90,000/– வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அதே வருடத்தில் பயிர் கடன் ரூ.6,22,906/– கடன் வாங்கியுள்ளீர்கள் என்றால் சரிதான். 2022–2023–ம் ஆண்டு வருமான வரி கணக்கில் எங்களுடைய கையிருப்பு ரூ.2,23,880/– என்று காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். அதே ஆண்டில் நான் கடன் கொடுத்தவர்களிடமிருந்து திரும்ப வட்டி பெற்ற தொகை மட்டும் ரூ.2,40,000/– காட்டியுள்ளேன் என்றால் சரிதான். அதே ஆண்டில் தான் நான் விவசாய கடன் ரூ.3,00,000/– வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அதே வருடத்தில் பயிர் கடன் ரூ.3,30,819/– கடன் வாங்கியுள்ளீர்கள்

என்றால் சரிதான். 2022- 2023-ம் ஆண்டு வருமான வரிக்கணக்கில் முடிவு தொகையாக வரவு, செலவு கணக்கில் இருப்பு தொகை ரூ.2308/- என்று காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். நான் வாங்கிய பயிர் கடனுக்கும், விவசாய கடனுக்கும் வங்கியில் வட்டி கட்டுகிறீர்கள் என்றால் சரிதான். நான் என்னுடைய சாட்சியத்தில் மற்றவர்களுக்கு கைமாற்று கடன் மட்டும் தான் கொடுப்பேன் என்றும், நான் யாருக்கும் வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை என்றும் சொல்லியுள்ள நிலையில் நான் தாக்கல் செய்துள்ள 2021-2022 மற்றும் 2022-2023 வருமான வரி கணக்கில் வட்டி மூலம் பெறும் வருமான தொகையை தலா ரூ.2,40,000/- என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அது பற்றி என்னுடைய ஆடிட்டருக்கு தான் தெரியும், அவரிடம் கேட்டு தான் சொல்ல வேண்டும்.

**நேரமின்மை காரணமாக மேலும் குறுக்கு விசாரணைக்கு வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

**ஒம்/-அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**